RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s199

# புறநானூற்றில் வெளிப்படும் திணைச் சூழலும் மானுட அறமும்

இரா. விஜயலட்சுமி [அ, *], கி. பார்த்திபராஜா [அ]

[அ] தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்-635601, தமிழ்நாடு, இந்தியா

# Human Virtues Revealed in Purananuru

R. Vijayalakshmi [a, *], K. Parthibaraja [a]

[a] Department of Tamil, Sacred Heart College (Autonomous), Tirupattur-635601, Tamil Nadu, India.

* Corresponding Author: lakshmisivatvm@gmail.com

Received: 02-07-2022
Revised: 30-09-2022
Accepted: 17-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Human race is undergoing various changes as time moves on. Literature is a tool to reflect all these changes. During Sangam period Tamil people were well civilized. Famous text of Sangam period such as Ettuthokai and Pathupaatu shows us the civilization of Tamil people. The writers of those period witnessed the culture, civilization and life styles of that time and distilled it into literature as poems. Irrigation systems, agricultural development, political law, hospitality and faith are very important in these songs. The poetic tradition carried out by Sangam literature is based on Thinai theory. The article overall examines the human virtues in Purananuru.

**Keywords:** Literature, Nature, Ethics and Principals, Political Laws, House Warming, Environment

## முன்னுரை

மனித சமுதாயம் ஒவ்வொரு காலகட்டத்திலும் பல மாறுதல்களை அடைந்து வருகிறது. அவற்றை பிரதிபலிப்பதில் இலக்கியங்கள் முக்கியப் பங்கு ஆற்றுகின்றன. இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை அனுபவங்களை வெளிப்படுத்துகின்றன. இதனை முன்னெடுத்துச் செல்வதில் சங்க இலக்கியத்திற்கு இணை கிடையாது. இயற்கை சூழலின் பின்புலத்தில் அவை படைக்கப்படுகின்றன. அதற்கான விதிமுறைகளும், மரபுகளும் உண்டு. சங்க இலக்கியங்கள் மேற்கொண்ட கவிதை மரபு திணைக்கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்ததாகும். அவற்றில் புறநானூற்றில் எடுத்தாளப்பட்டுள்ள திணைச்சூழல் பதிவுகளையும் அதனைப் பின்புலமாகக் கொண்டு அமைந்த வாழ்க்கை அறங்களையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு பயன்

சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள திணைச் சார்ந்த மானுட அறங்களை ஆய்வு செய்து எடுத்துக்கூறும் நோக்கில் இந்தக் கட்டுரையின் பொருண்மை தேர்ந்தெடுக்கப்பட்டது. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் முதலில் வாசிக்கப்பட்டன. அவற்றில் புறநானூறு முழுவதும் வாசிக்கப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் மானுட அறம், அரசியல், மேலாண்மை, விருந்தோம்பல், நம்பிக்கைப் போன்றவை திணைச் சூழலின் பின்புலத்தில் வெளிப்படுத்தியிருப்பதை அறியமுடிகிறது. அதன்பின் அந்தத் தகவல்கள் வரிசைப்படுத்தி இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன. அத்தகவல்கள் தற்காலத்தில் வாழும் அனைவரும் அதனைப் பின்பற்றி மேன்மையடைய வேண்டும் என்பதை உணர்த்துகின்றன.

## புறநானூறு குறிப்பு

சங்க இலக்கியமான எட்டுத்தொகை நூல்களில் புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது புறநானூறு. நானூறு பாடல்களில் இரண்டு பாடல்கள் (267,268) முழுவதுமாகக் கிடைக்கவில்லை. பல்வேறு புலவர்கள் பல்வேறு காலங்களில் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு இந்நூல். எந்தச் சமயத்தையும் இந்நூல் சார்ந்திருக்கவில்லை. அரசியல் கருத்துக்களையும், வாழ்க்கை அறங்களையும், பண்டைய வாழ்க்கை முறையையும், போர் நெறிகளையும் கொண்ட களஞ்சியம் புறநானூறு. வாரலாற்றுப் பெட்டகமாக விளங்குகிறது. இந்நூல் முழுமைக்கும் உரை எழுதியவர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

## திணை - விளக்கம்

இலக்கிய வடிவங்களைச் செய்யுள் என்று தொல்காப்பியர் காலத்தில் கூறப்பட்டது. மேலும் தொல்காப்பியம் செய்யுள் உறுப்புகளாக முப்பத்து நான்கு உறுப்புகளை எடுத்துக் கூறுகிறது. அவற்றுள் திணையும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை

“மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ

திணையே கைகோள் பொருள்வகை எனாஅ”

என்ற நூற்பா விளக்குகின்றது (Ilampuranar, 2008). இதில் திணை எனும் சொல்லை ஒழுக்கம், நிலம் என்ற பொருளில் தொல்காப்பியர் எடுத்தாளுகின்றார். மேலும் அகத்திணையியல், புறத்திணையியல் என இயல்கள் வழங்குமிடங்களில் அக ஒழுக்கம், புற ஒழுக்கம் என விளக்கப்பட்டுள்ளது. எனவே திணை எனும் சொல் ஒழுக்கம் என்ற பொருளில் வந்துள்ளதைக் காணமுடியும்.

அத்துடன் சங்க இலக்கியங்களில் திணை என்னும் சொல் நிலம், குடி, குடும்பம், குலம், ஒழுக்கம் என்ற பொருண்மையில் எடுத்தாளப்பட்டுள்ளன. திணை எனும் சொல் பூமி, இடம், வீடு, குலம், ஒழுக்கம், அகமும் புறமுமாகிய ஒழுக்கம், உயர்திணை அஃறிணைகளாகிய பகுப்புகள் எனப் பல்வேறு பொருள்களைக் கொண்டுள்ளது. இதில் நிலம் என்ற பொருளே முதன்மையாக உள்ளது.

## திணைச்சூழல்

முப்பொருள் பாகுபாடு என்பது இலக்கியத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும். அவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பனவாகும். முதற்பொருள் என்பது இயற்கையின் பின்புலத்தில் அமைந்த நிலமும், பொழுதும். கருப்பொருள் என்பது இயற்கையும் மனித வாழ்க்கையும் இணைந்தது. உரிப்பொருளாவது கவிதை மரபிற்கு முக்கியமான ஒழுக்க வகைகளைக் கூறுவது.

இந்த பாகுபாடு நாடகப் போக்கைக் கூறுகிறது என்பதை, “உரிப்பொருளின் துணையாய் இயற்கை வருணனை வருகின்றது. அவ்வியற்கைக் காட்சியே பாடலின் நாடகப் பண்பினுக்கு உரிய அரங்காக அமைகின்றது. அவ்வரங்கு இரு பிரிவாக உள்ளது. இடமும் காலமும் குறித்தது ஒரு பகுதி. அப்பகுதியைத் தொல்காப்பியனார் முதற்பொருள் என்றார். முதற்பொருளும் கருப்பொருளும் ஆகிய அரங்கில், உரிப்பொருள் ஆகிய உணர்ச்சிச் செயற்பாடு நிகழ்கின்றது. எனவே இம்மூன்றும் அமைந்த சங்கப் பாடல்களை நாடகப் பாடல்கள் என்று கூறலாம்” என்கிறார் (Varatharasan, 2017).

## கவிதை மரபும் வாழ்வியலும்

மக்களின் வாழ்க்கையிலிருந்தே இலக்கியம் படைக்கப்படுகின்றன. இதனை

“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கம்

கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்

உரிய தாகும் என்மனார் புலவர்"

என்ற நூற்பா உலகின் நடைமுறையை எடுத்தியம்புகிறது (Ilampuranar, 2008). இதன்மூலம் மனிதர்களின் வாழ்வியல் சார்ந்த அறங்களை முன்னெடுத்துச் செல்வதில் சங்க இலக்கியத்தின் பங்கு அளப்பரியதாகும்.

## வாழ்க்கை அறம்

இயற்கையின் பின்புலத்தில் அமைந்த மக்களின் வாழ்க்கை நம்பிக்கை, அரசியல், மேலாண்மை, விருந்தோம்பல் போன்ற வாழ்க்கை அறங்களைப் பின்பற்றியதாக அமைந்துள்ளது. இயற்கையோடு இணைந்தே சங்க கால மக்கள் வாழ்ந்துள்ளனர். காலப்போக்கில் இயற்கையை மாற்றி அமைத்துக்கொண்டு பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொண்டனர்.

சங்க இலக்கியத்தில் பல்வேறு ஆய்வுகள் வந்த போதிலும் அவை மானுட அறவழியை இயற்கையின் அடிப்படையில் திணையின் பின்புலத்தில் பார்ப்பது என்பது அரிதாகவே உள்ளது. வாழ்வியல் அறங்களைக் கூறுவது இயற்கை நிகழ்வுகளே ஆகும். இதனை முன்னிலைப்படுத்திச் சங்க பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. நிலவு தேய்வதையும், பின் வளர்வதையும் கண்ட புலவர் மனித வாழ்வோடு இணைத்துக் கூறுகின்றார்.

"தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும்,

மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்,

அறியாதோரையும் அறியக் காட்டி,

திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து"

என்ற அடிகள் மூலம் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர் வாழ்வில் ஏற்படும் இன்பங்களும், துன்பங்களும் வருவதும் பின் மறைவதும் வாழ்வியல் அறம் என நிலவின் செயலுக்கு ஒப்புமைப்படுத்திக் கூறுகின்றார் (Balasubramanian, 2017).

## நம்பிக்கை

நாள் மீன் நிலைப்பது நன்மை தரும் அறிகுறியாகவும், தூமம் என்னும் வால் நட்சத்திரம் தோன்றுவதும், சனி என்னும் கோள் புகைவதும் தீய அறிகுறிகளாகவும் அக்காலத்தில் கருதப்பட்டுள்ளது. இதனை

"நின்று நிலைஇயர் நின் நாள்மீன் நில்லாது

படாஅச் செலீஇயர், நின் பகைவர் மீனே" (Balasubramanian, 2017)

"மைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்,

தென் திசை மருங்கின் வெள்ளி ஓடினும்"

என்ற வரிகள் இயம்புகின்றன (Balasubramanian, 2017). இயற்கையின் செயல்களை அடிப்படையாகக் கொண்டு மனித வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளை அணுகினர் அக்காலப் புலவர்கள் என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

## அரசியல் அறம்

ஒருவர் தீமை செய்தால் அவர் நமக்கு வேண்டியவர் என்று பொறுத்துக் கொள்வதும், பகைவராக இருப்பதால் அவரின் நற்குணங்களை மதியாமல் இருப்பதும் அரசருக்கு உரிய அறச்செயல் அல்ல. அவர் ஞாயிற்றைப் போல வெம்மையான ஆற்றலுடனும், திங்களைப் போல் குளிர்ந்த மென்மையுடனும், மழையைப் போன்று கொடைச்சிறப்புடனும் இருப்பதே அறமாகும். இதனை

“அற நெறி முதற்றே, அரசின் கொற்றம்

அதனால், ‘நமர்’ எனக் கோல் கோடாது,

‘பிறர்’ எனக் குணம் கொல்லாது”

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன (Balasubramanian, 2017). மேலும் குழந்தைகளைக் காப்பது போல அரசன் மக்களைக் காக்க வேண்டும் என்பதை,

“குழவி கொள்பவரொடு ஒன்றாது, காவல்,”

என்ற வரிகள் மூலம் அறியலாம் (Balasubramanian, 2017). மக்களுக்கான நீதி மழையைப் போல உரிய நேரத்தில் கிடைக்கப் பெறுதல் வேண்டும். இதுபோல் பல பாடல்கள் மூலம் அரசனின் அறச்செயல்களைச் சூரியன், திங்கள், வானம், மழை போன்ற இயற்கைப் பொருட்களின் பின்புலத்தில் புலவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

## மேலாண்மை அறம்

மழை வரும் காலங்களை நன்கு உணர்ந்த மக்கள் அவற்றைத் தேக்கி வைத்துப் பிற்காலங்களில் பயன்படுத்தும் மேலாண்மையை அறிந்திருந்தனர். அரசர்களுக்கும் அதைச் சார்ந்தே அறிவுரையும் வழங்கினர். நீரியல் மேலாண்மையின் பயனாகக் கால்வாய்களை அமைத்தல், ஏரி, குளங்களை ஏற்படுத்துதல், நீர்நிலைகளைப் பாதுகாக்க ஆட்களை நியமித்தல் போன்ற அறங்களைச் செய்தனர் என்பதை

“நிலன் நெளி மருங்கில் நீர் நிலை பெருகத்”

இதன் மூலம் அறியமுடிகிறது (Balasubramanian, 2017). அத்துடன் கோடைக்காலங்களில் வறட்சி ஏற்படாமல் இருக்கக் காவிரி நீரின் வளத்தைப் பயன்படுத்தியுள்ளனர். நீர்ப் பற்றாக்குறையால் பேரழிவுகள் ஏற்படா வண்ணம் காவிரியாற்றில் நீர் மேலாண்மை செய்து வளம் கொழிக்கச் செய்துள்ளதை

“கோடை யாயினுங் கோடே வொழுக்கத்துக்

காவிரி புரக்கும்”

இவ்வரிகள் எடுத்தியம்புகின்றன (Balasubramanian, 2017). மேலும் நிலத்தின் தன்மை அறிந்து பயன்படுத்த வேண்டும். உரியக் காலத்தில் முறையாகப் பயன்படுத்தினால் சிறந்த பலனைப் பெறலாம் என

“வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவல்

வாலிதின் விளைந்த புது வரகு அரிய”

இவ்வரிகள் உணர்த்துகின்றன (Balasubramanian, 2017). நிலத்தை உழுது பண்படுத்தி உற்பத்தியினைப் பெருக்கியுள்ளதை

“உழுத நோன் பகடு அழி தின்றாங்கு”

இவ்வரி எடுத்தியம்புகின்றது (Balasubramanian, 2017). நீர் பற்றாக்குறை என்பது தற்காலத்தில் மக்கள் சந்திக்கும் பெரும் பிரச்சனையாகும். ஆனால் சங்க காலத்தில் நீர் மேலாண்மையுடன் நில மேலாண்மையும் அறிந்து வைத்திருந்தனர் என்பது ஆய்வின் மூலம் தெரியவருகிறது.

## விருந்தோம்பல் அறம்

சங்க காலத்தில் மானுட அறங்களில் முக்கியமானதாகப் பின்பற்றியவற்றில் சிறந்ததாக விருந்தோம்பல் காணப்படுகிறது. மன்னர்கள் பரிசுகளை வழங்கி உபசரித்துள்ளனர். மக்களும் தங்கள் வாழ்வின் பெரிய பலனாக விருந்தோம்பலைக் கருதினர். தங்களுக்கு இல்லையென்றாலும் விருந்தினருக்கு அளிப்பதை மனநிறைவு தரும் கடமையாக எண்ணி வாழ்ந்தனர். வந்தவர்களுக்கு உணவளித்தபின் உணவுப் பொருட்கள் இல்லாத சூழலிலும் விதைக்காக வைத்திருந்த தினையினை உணவாகச் சமைத்து விருந்தோம்பல் அறத்தினை மேற்கொண்டதை

"வரகும் தினையும் உள்ளவை எல்லாம்

இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென,

குறித்து மாறு எதிர்ப்பை பெறாஅமையின்,

குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து"

இவ்வரிகள் மூலம் புரிந்து கொள்ளமுடிகிறது (Balasubramanian, 2017). ஆனால் விதை நெல்லை விருந்தோம்பலுக்குப் பயன்படுத்தியிருப்பது அறிவார்ந்த செயலா என்பது சிந்திக்க வேண்டியதாகும். அதேபோல் அவர்கள் விருந்தோம்பல் என்பது வாழ்வியலுக்கான தவிர்க்கக் கூடாத அறமாக எண்ணியிருந்ததே அச்செயலுக்கான காரணமாக இருந்துள்ளதைப் பல பாடல்கள் உணர்த்துகின்றன.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து"

எனத் திருவள்ளுவரும் (Parimelagar, 2013),

"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"

எனத் தொல்காப்பியரும் விருந்தோம்பலின் சிறப்பைக் கூறியுள்ளனர் (Ilampuranar, 2008).

## முடிவுரை

உலக இயல்புகள் திணை கவிதை மரபில் கட்டமைக்கப்பட்டுள்ளன. இயற்கையின் பின்புலத்தில் நிலமும் பொழுதும் உள்ளன. இயற்கையின் சூழ்நிலையையும், மக்களின் அற வாழ்வையும் கருப்பொருட்கள் காட்டி நிற்கின்றன. இவை தனித்தனி நிலம் சார்ந்த வாழ்வியலாக அமைகின்றன. உலகிற்கு அறக்கருத்துக்களை வழங்கியதில் சங்க இலக்கியங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. பொதுவுடைமைச் சமுதாயமாக வாழ்ந்த சங்க காலத்தில் மக்களும், மன்னர்களும் வாழ்வியலுக்கான அறங்களை பின்பற்றியே வாழ்ந்துள்ளனர். அறம் பற்றிய சிந்தனைகள் குறிப்பிட்ட நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவை அடிப்படைக் கடமையாக இருந்துள்ளன. அரசர்கள் மேற்கொண்ட அரசியல் அறங்களும், மக்கள் பின்பற்றிய மேலாண்மை, விருந்தோம்பல் போன்ற அறங்களும் இன்றைய சமுதாயத்திற்கு ஒரு பாடமாக விளங்குகின்றன. இலக்கியங்கள் திணைக்கோட்பாட்டின் அடிப்படையில் படைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பின்னணியல் கூறப்பட்டுள்ள அறங்கள் மானிடர்களின் வாழ்க்கைக்கு மிகவும் தேவையானவையாகும். அவற்றை கடைப்பிடித்தால் தனிமனித வாழ்வும், சமுதாயமும் மேன்மையடையும். நீதி நூல்களில் அறம் (பழமொழி காட்டும் வாழ்வியல் நெறிகள், உலக பொதுமறையில் இயற்கைச் சூழல், ஆசாரக்கோவை கூறும் வாழ்வியல்

ஒழுகலாறு) சார்ந்த ஆய்வுகள் வந்த போதிலும் அவை இயற்கை வர்ணனையாகவும், வாழ்வியல் ஒழுக்கங்களைக் கூறும் ஆய்வுகளாகவும் அமைந்துவிடுகின்றன. பழந்தமிழரின் அறவாழ்க்கையைப் பேசும் இந்நூல் மானுட அறம் பேசுவதோடு திணைச் சூழலின் அடிப்படையில் இயற்கைச் சார்ந்த அறக் கோட்பாடுகளை எடுத்துக் கூறும் சிறந்த வரலாற்றுக் களஞ்சியமாகும். மானிட சமுதாயம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு நல்லதொரு வழிகாட்டும் அற்புத இலக்கியமாகும்.

## References

Ilampuranar, (2008) Tholkappiyam Porulathigaram, Saradha Pathippagam, Chennai, India.

Parimelagar, (2013) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Varatharasan, K.V. (2017) Purananuru, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License